[20th March 1959

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில், ஆதாரப் பயிற்சி என்று சொல்லும் போது சில மனப்பான்மையிருக்க வேண்டியது அவசியம். அதற்காகத்தான் கதர் போட்டிருக்கிறார்களா என்று கவனிக்கிறார்கள். ஆனால் அதை மட்டும் கொண்டு முடிவு எடுக்கப்படுவதில்லை. அதற்காக கோவிந்தசுவாமி அவர்கள் கதரை அப்படி புறக்கணிக்கவேண்டியதில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : சென்ற முறை கங்கவல்லி பயிற்சி பள்ளிக்கு நபர்களைப் பொறுக்கும்போது, Forward Communtiy-ல் ஆள்கள் இல்லாமல் போய் Backward கம்யூனிட்டியில் இருந்து எடுத்து போடவேண்டிவந்தது சர்க்காருக்குத் தெரியுமா ?

SRI S. LAZAR : தனியார் வைத்து நடத்தும் பயிற்சி பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கிறபோது எந்தெந்த அடிப்படையில் சேர்க்க வேண்டுமென்று இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படிதான் இப்பொழுது அட்மிஷன் கொடுக்கப்பட்டு வருகிறது என்பது சரிதானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுப்பது சுலபம். அதை மீறி நடப்பதும் சுலபம். ஆகவே, நடைமுறையில் காரியங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு பார்க்க வேண்டும்.

Survey of Small Scale Industries

* 916-F Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri K. S. Sattanatha Karayalar) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any statewide survey of Small Scale Industries has been undertaken recently; and

(*b*) if so, what are the Industries and what is the result?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Small Industries Service Institute, Madras, has undertaken a survey of certain small scale industries in the Southern Region including the Madras State and has issued Industry Outlook Reports for those Industries. The Institute has also undertaken the survey of small Scale Industries in certain towns, namely Madras, Tiruchirappalli, Madurai and Coimbatore.

(*b*) A statement[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் (பி) கேள்விக்கு பதில் கொடுக்கப்படவில்லை. சர்வேயின் முடிவு என்னவென்று கேட்கப்பட்டிருக்கிறது. சர்வேயின் முடிவு என்னவென்று சொல்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதுதான் அச்சடித்து வைக்கப்பட்டிருக்கிறது. Small Scale Industries in which they have issued reports, அவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

SRI K. B. S. MANI : மேஜைமீது இருக்கிற அறிக்கையில் 139 இண்டஸ்ட்ரீஸ்-ன் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் சர்க்கார் எத்தனை நடத்துகிறார்கள்? தனியார் துறையில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டது எவ்வளவு அல்லது பழைய முதலாளிகளால் நடத்தப்பட்டு சர்க்கார் மானியம் பெறுவது எவ்வளவு ? என்று கூறமுடியுமா ?

MR. SPEAKER : தனி கேள்வி போட வேண்டும்.

---

[a] Printed as Appendix II on pages 187—189 infra.